செ.வெ.எண்.5 /2018, நாள்.04.01.2018

# செய்திக்குறிப்பு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

### வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு

தமிழக அரசின் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு தோல்வி அடைந்தவர்களுக்கு ரூ.200/– , 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300/– , 12ஆம் வகுப்பு தேர்ச்சி/பட்டயப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400/–மற்றும் பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.600/– வீதம் மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்பட்டுவருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற ,

1) காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மேற்காணும் கல்வித்தகுதிகளை பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும். (மாற்றுத்திறனாளிகளை பொருத்த வரை ஓராண்டு)

2) பதிவினை தொடர்ந்து புதுப்பித்திருக்க வேண்டும்.

3) MBC/BCM/OBC/OC பிரிவினர் 40 வயதிற்குட்பட்டவராவும், SC/SCA/ST பிரிவினர் 45 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். (மாற்றுத்திறனாளிகளுக்கு வயதுவரம்பு இல்லை)

4) விண்ணப்பதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். (மாற்றுத்திறனாளிகளுக்கு வருமான வரம்பு இல்லை).

5) ஏற்கனவே வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை பெற்றிருக்கக்கூடாது.

மேற்காணும் அனைத்து தகுதிகளும், விருப்பமும் உள்ள பதிவுதாரர்கள் காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பத்தினை வேலைவாய்ப்பு அடையாள அட்டையுடன் நேரில் வருகைபுரிந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது **www.tnvelaivaaippu.gov.in//Empower** என்ற இணையதள முகவரியிலும் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் அதில் குறிப்பிட்டுள்ளவாறு வருவாய் ஆய்வாளர் அளவில் வழங்கப்பட்ட சான்று, கல்விச்சான்று நகல், சாதிச்சான்று நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் சேமிப்பு கணக்கு புத்தக நகல் இணைத்து **28.02.2018**க்குள் காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். உதவித்தொகை பெறுவதால் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பெறப்படும் பரிந்துரைகள் ஏதும் பாதிக்கப்படமாட்டாது.

தற்போது வேலைவாயப்பற்றோர் உதவித் தொகை பெறும் பயனாளிகள் தங்களது ஆதார் எண்ணை வேலைவாய்ப்பு பதிவுடன் இணைக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், தொடர்ந்து உதவித் தொகை பெற ஒரு வார காலத்திற்குள் காஞ்சிபுரம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஆதார் எண் விவரத்தினை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.